# முழங்கால் யுத்தம்

## "பிரார்த்தனை நேரம்"



ட.ஜோசப்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

## “பிரார்த்தனை நேரம்”

# முழங்கால் யுத்தம்



தேவ ஊழியன்

L.ஜோசப்

“இயேசுகிறிஸ்துவை நோக்கி
உண்மையாய்ப் பிரார்த்திக்கிற யாவருக்கும்,
இயேசுகிறிஸ்து பிரார்த்தனையைக் கேட்க
அவர்கள் அருகிலிருக்கிறார்” (சங் 145:18)

## உங்களோடு...

**ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

இயேசுகிறிஸ்துவின் கிருபையால் **"முழங்கால் யுத்தம்-பிரார்த்தனை நேரம்"** என்ற இந்த சிறிய பிரார்த்தனைக் கையேட்டினை எளிய முறையில் தயாரித்து வெளியிட்டுள்ளோம்!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்தவர்கள் அவரிடத்தில் எப்படி பிரார்த்திக்க வேண்டுமென்று தெரியாததால், அப்படிப்பட்டவர்களுக்காகவே இந்த பிரார்த்தனைக் கையேட்டினை வெளியிட்டுள்ளோம். இதன் மூலம் குடும்பத் தலைவர்கள், குடும்பத் தலைவிகள், வாலிபப் பிள்ளைகளள், சிறுபிள்ளைகள் மிகவும் எளிய முறையில் ஸ்தோத்திரங்களை சொல்லி இயேசுகிறிஸ்துவினிடத்தில் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள



முடியும். மேலும், சரீர சுகத்திற்காக, விடுதலைக்காக, பிரச்சினைக்காக, தொழில் செய்வோர்க் காக எப்படி ஜெபிக்க வேண்டும்? என்ற மாதிரியையும் தொகுத்து வழங்கியுள்ளோம். இதனை வைத்து நீங்கள் பிரார்த்தனை செய்யக் கற்றுக்கொள்ளும் போது இயேசுகிறிஸ்து மெய்யாகவே உங்கள் பிரார்த்தனையைக் கேட்டு ஆசீர்வதிப்பார்! அற்புதம் செய்வார்!! அதிசயம் செய்வார்!!!

அன்பும்! ஜெபமும்!!
L. ஜோசப்

*"பிரார்த்தனையைக் கேட்கிறவரே"*
*"பிரார்த்தனையைத் தள்ளாதவரே"*
**(சங்கீதம் 65:2; 66:20)**

குறிப்பு:
இதிலுள்ள ஸ்தோத்திரங்களைச் சொல்லி பிரார்த்திப்பதும், தியானப்பகுதியை தியானிப்பதும் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும்.

# இயேசுவைத்துதிப்போம்!

***"ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்" (சங்கீதம் 50:23)***

1. அப்பா பிதாவே! உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!
2. ஆண்டவராகிய இயேசுவே! ''
3. பரிசுத்தமான தேவனே! ''
4. அற்புதங்களின் தேவனே! ''
5. தேவாதி தேவனே! ''
6. மகிமையின் தேவனே! ''
7. கர்த்தாதி கர்த்தரே! ''
8. இரட்சிப்பின் தேவனே! ''
9. இராஜாதி இராஜாவே! ''
10. இரக்கமுள்ள தேவனே! ''
11. மன்னிக்கிற தேவனே! ''
12. ஆறுதலின் தேவனே! ''
13. என்னை பெலப்படுத்துகிறவரே! ''



14. என்னைத் திடப்படுத்துகிறவரே! ''
15. என்னைத் தைரியப்படுத்துகிறவரே! ''
16. என்னோடுகூட இருக்கிறவரே! ''
17. என் துணையாக இருக்கிறவரே! ''
18. எனக்கு உதவி செய்கிறவரே! ''
19. என் ஜெபத்தைக் கேட்கிறவரே! ''
20. சமாதானம் கொடுக்கிறவரே! ''
21. சுகத்தைக் கொடுக்கிறவரே! ''
22. என்னைத் தாங்குகிறவரே! ''
23. என்னை ஏந்துகிறவரே! ''
24. என்னை சுமக்கிறவரே! ''
25. என்னை விசாரிக்கிறவரே! ''
26. தாயைப்போல் தேற்றுகிறவரே! ''
27. தந்தைபோல் அணைக்கிறவரே! ''
28. என்மேல் மனதுருகுகிறவரே ! ''
29. என் கண்ணீரைத் துடைக்கிறவரே! ''
30. ஜெயங்கொடுக்கிற தேவனே! ''

## காலை ஜெபம்!

**என்னை கிருபையாய் நேசிக்கிற அன்பின் பரலோகப் பிதாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! கடந்த இரவு முழுவதும் நீர் கொடுத்த இளைப்பாறுதலுக்காக, உடல் சுகத்திற்காக, பெலத்திற்காக, பாதுகாப்பிற்காக உமக்கு நன்றி சொல்லுகிறேன்!

இயேசுவே! இந்த புதிய நாளுக்காக உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்! இந்த நாள் முழுவதும் நீர் என்னை ஆட்கொண்டு, கரம் பிடித்து வழி நடத்தும்! என்னை கண்மணியைப் போல பாதுகாத்துக் கொள்ளும்! உமக்குப் பிரியமான பிள்ளையாக நடந்துகொள்ள எனக்கு உதவி செய்யும்! என் வாய் உமது துதியினாலும், உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக! இந்த நாளில் நான்



செய்யும் எல்லாக் காரியங்களையும் எனக்கு ஆசீர்வாத மாக்கித் தாரும்! எனக்குத் துணையாக, என்னோடிருந்து என்னை ஆசீர்வதியும்!

இயேசுவே! நீர் அப்படி செய்வதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்!

இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜீவனுள்ள நல்ல பிதாவே! ஆமென்!

***"இயேசுகிறிஸ்துவின் கிருபைகள், காலைதோறும் புதியவைகள்" (புலம்பல் 3 : 22)***

***"அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதிமொழிகள் 8 : 17)***



## குடும்பத்தலைவரின் ஜெபம்!

**எங்களை கிருபையாய் நேசிக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! உம்மை நோக்கி பிரார்த்திக்க நீர் கொடுத்த நல்ல தருணத்திற்காக உம்மை துதிக்கிறேன்! இயேசுவே! நீர் எனக்குக் கொடுத்த நல்ல மனைவிக்காக உம்மை துதிக்கிறேன்! என் மனைவியை ஆசீர்வதியும்! உமக்குப் பிரியமான மகளாக வாழ உதவி செய்யும்! குடும்பத்தை நன்றாய் நடத்த ஞானத்தைத் தாரும்! இயேசுவே! என் மனைவியை கரம் பிடித்து வழிநடத்தும்!

நீர் எனக்குக் கொடுத்த நல்ல பிள்ளைகளுக்காக உம்மை துதிக்கிறேன்! பிள்ளைகளை உம்முடைய கரத்தில் அர்ப்பணிக்கிறேன்! இவர்கள் நன்றாக படிக்க உம்முடைய ஞானத்தினாலும், புத்தியினாலும் நிரப்பும்! சரீரத்தில் நல்ல



சுகத்தையும், பெலத்தையும் தந்து இவர்களை ஆசீர்வதியும்! உமக்குப் பிரியமான பிள்ளைகளாக வாழ உதவி செய்யும்!

இயேசுவே! என் குடும்பத்தை நன்றாய் நடத்த எனக்கு உதவி செய்யும்! நீர் எனக்குக் கொடுத்த நல்ல வேலைக்காக உமக்கு நன்றி! நீர் செய்த எல்லா நன்மைகளுக்காகவும், நீர் கொடுத்த எல்லா ஆசீர்வாதங்களுக் காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன்!

இயேசுவே! நீர் என் பிரார்த்தனை யைக் கேட்டதற்காக உமக்கு நன்றி!

இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமை யுள்ள பிதாவே! ஆமென்!

***"நானும் என் வீட்டாருமோ வென்றால், இயேசுகிறிஸ்துவையே சேவிப்போம்" (யோசுவா 24 : 15)***

## குடும்பத்தலைவியின் ஜெபம்!

எங்களை கிருபையாய் நேசிக்கிற அன்பின் பரலோகப் பிதாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!

இயேசுவே! நீர் எனக்குக் கொடுத்த நல்ல கணவருக்காக உம்மை துதிக்கிறேன்! அவருக்கு நீர் கொடுத்த நல்ல வேலைக்காக உமக்கு நன்றி! என் கணவருக்கு நல்ல சுகத்தையும், பெலத்தையும் கொடுக்கும்படி வேண்டுகிறேன்! இயேசுவே! உம்முடைய கரத்தினால் அவரைப் பாதுகாத்தருளும்! நீரே, அவரை கரம் பிடித்து வழிநடத்தும்! என் கணவரை ஆசீர்வதியும்!

இயேசுவே! எங்களுக்கு நீர் கொடுத்த நல்ல பிள்ளைகளுக்காக உம்மை துதிக்கிறேன்! பிள்ளைகளுக்கு நல்ல ஞானத்தையும், புத்தியையும் தாரும்! இயேசுவே! உமக்குப் பிரியமான



பிள்ளைகளாக வாழ இவர்களுக்கு உதவி செய்யும்! உம்முடைய வேத வசனத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும்!

இயேசுவே! என்னையும் உம்முடைய கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! எங்கள் குடும்பத்தை நன்றாய் நடத்த என்னை உம்முடைய ஞானத்தினால் நிரப்பும்! எங்கள் தேவைகளைச் சந்தியும்! குறைவுகளை நிறைவாக்கும்! எங்கள் குடும்பத்தை ஆசீர்வதியும்!

இயேசுவே! நீர் அப்படிச் செய்வதற்காக உமக்கு நன்றி சொல்லுகிறேன்!

இயேசுவின் பரிசுத்த நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜீவனுள்ள நல்ல பிதாவே! ஆமென்!

*“புத்தியுள்ள மனைவி தன் வீட்டைக் கட்டுகிறாள்” (நீதி 14 : 1)*

## வாலிபப்பிள்ளைகளின் ஜெபம்!

**எங்களை அன்பாய் நேசிக்கிற பரலோகப் பிதாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! இந்த நல்ல நாளுக்காக உம்மை துதிக்கிறேன்! நீர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும், உதவிகளுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! இயேசுவே! எனக்கு நீர் கொடுத்த நல்ல பெற்றோருக்காக, நல்ல சகோதர, சகோதரிகளுக்காக உமக்கு நன்றி! நீர் இவர்களை ஆசீர்வதியும்!

இயேசுவே! உம்முடைய கரங்களில் என்னை முழுவதுமாக ஒப்படைக்கிறேன்! இந்த நாள் முழுவதும் நீர் என்னைக் கைவிடாமல் கரம்பிடித்து வழிநடத்தும்! இயேசுவே! நான் பாவத்திற்கு விலகி, பரிசுத்தமாக வாழ எனக்கு உதவி செய்யும்! என் வாயின் வார்த்தைகளும்,



என் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரியமாய் இருக்கட்டும்! இயேசுவே! உம்முடைய வேத வசனத்திற்குக் கீழ்ப்படிந்து சாட்சியாக வாழ எனக்கு உதவி செய்யும்! உமக்குப் பிரியமான மகனாக/மகளாக வாழ என்னை வழிநடத்தும்! என் படிப்பிற்கு/ வேலைக்கு வேண்டிய ஞானத்தையும், அறிவையும் எனக்குத் தாரும்! நீர் என்னை ஆசீர்வதித்து உயர்த்தும்படியாக வேண்டுகிறேன்!

இயேசுவே! நீர் என் பிரார்த்தனையை கேட்டதற்காக உமக்கு நன்றி!

இயேசுவின் விலையேறப்பெற்ற நாமத்தில் ஜெபிக்கிறேன்! அன்பின் பரம பிதாவே! ஆமென்!

***"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின் படி தன்னைக் காத்துக்கொள்ளுகிற தினால்தானே" (சங்கீதம் 119 : 9)***

## படிக்கிற பிள்ளைகளின் ஜெபம்!

வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் உள்ள சர்வ வல்லமையுள்ள தேவனே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!

இயேசப்பா! இந்த நாளுக்காக உமக்கு நன்றி! கடந்த நாள் முழுவதும் என்னோடுகூட இருந்ததற்காக உமக்கு நன்றி! இயேசப்பா! இந்த நாளிலும் எனக்குப் பாடங்களை கற்றுக் கொடுக்கிற ஆசிரியர்களை ஆசீர்வதியும்! இன்று ஆசிரியர் எனக்குக் கற்றுத்தரும் எல்லாப் பாடங்களையும் நன்றாகப் புரிந்து கொள்ள எனக்கு உதவி செய்யும்! இயேசப்பா! நான் நன்றாக படிப்பதற்கு வேண்டிய நல்ல ஞானத்தையும், புத்தியையும், ஞாபக சக்தியையும், புரிந்துகொள்ளும் திறனையும் எனக்குத் தாரும்! உமக்குப் பிரியமான பிள்ளை யாக வாழ எனக்கு உதவி செய்யும்!



இயேசப்பா! நான் உமக்காக வாழ்ந்து எனது பெற்றோருக்கும், எங்கள் வீட்டிற்கும், எங்கள் நாட்டிற்கும் நல்லவனாக/நல்லவளாக இருக்க கிருபை தாரும்! இன்று நடக்கின்ற தேர்வில் நன்றாய் எழுத உதவி செய்யும்! இயேசப்பா! இந்த நாள் முழுவதும் நீர் என்னோடுகூட இருக்கும்படியாக பிரார்த்திக்கிறேன்!

இயேசப்பா! நீர் என் பிரார்த்தனையைக் கேட்டதற்காக உமக்கு நன்றி!

இயேசப்பாவின் இன்ப நாமத்தில் ஜெபிக்கிறேன்! நல்ல பிதாவே! ஆமென்!

***"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக்கோபு 1 : 5)***

## இரவு ஜெபம்!

***சர்வ வல்லமையுள்ள பிதாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக் கிறேன்! மகிமைப்படுத்துகிறேன்!***

இயேசுவே! இந்த நாளின் காலை முதல் இந்நேரம் வரைக்கும் என்னை ஆட்கொண்டு வழிநடத்தியதற்காக உமக்கு நன்றி! உமக்கு முன்பாக சுத்த மனசாட்சியோடு வாழ எனக்கு உதவி செய்ததற்காக உமக்கு நன்றி! இயேசுவே! இந்த நாளில் நீர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காக உமக்கு நன்றி! என்னை எல்லாவித தீமைகளுக்கும் விலக்கிப் பாதுகாத்துக் கொண்டதற்காக உமக்கு நன்றி!

இந்த நாளில் உமக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்திருந்தால் என்னை தயவாய் மன்னியும்! இயேசுவே! உம்முடைய பரிசுத்த இரத்தத்தால் என்னைக் கழுவி சுத்திகரியும்!



என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை உம்முடைய பாதுகாப்புள்ள கரங்களில் ஒப்படைக்கிறேன்! என்னை முற்றிலுமாக ஆளுகைச் செய்யும்! இந்த இரவிலே தீய எண்ணங்களோ, கெட்ட சிந்தனைகளோ வராதபடிக்கு சாத்தானுடைய சகல தந்திரங்களுக்கும் என்னை விலக்கிப் பாதுகாத்தருளும்! நாளை அதிகாலையில் சீக்கிரமாக எழும்பி உம்மை துதிக்கவும், பிரார்த்திக்கவும் எனக்குக் கிருபை தாரும்!

இயேசுவே! நீர் அப்படிச் செய்வதற் காக உமக்கு நன்றி சொல்லுகிறேன்!

இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் ஜெபிக்கிறேன்! பரிசுத்த பிதாவே! ஆமென்!

***“நான் உன்னைவிட்டு விலகுவது மில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை” (யோசுவா 1 : 5)***

## சுகத்திற்காக ஜெபம்!

பரிசுத்தமுள்ள பரலோக பிதாவே! இந்த வேளைக்காக உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!

இயேசுவே! அன்பு சகோதரன்/ சகோதரி ............................ க்காக (பெயரைக் குறிப்பிடவும்) உம்முடைய சமுகத்தில் வந்து நிற்கிறேன்! இயேசுவே! இவருடைய சரீர சுகத்திற்காக பாரத்தோடு ஜெபிக்கிறேன்! இயேசுவே! இவருடைய பாவங்களை மன்னியும்! சாபங்களை நீக்கியருளும்! உம்முடைய பரிசுத்த இரத்தத்தால் இவரைக் கழுவி பரிசுத்தப்படுத்தும்!

இயேசுவே! இவர்மேல் கிருபையாய் மனமிரங்கும்! நல்ல சரீர சுகத்தைத் தாரும்! உம்முடைய காயம்பட்ட தழும்புகளால் இவருக்கு பூரணசுகம் கிடைக்கும்படியாக வேண்டுகிறேன்!



என் பிரார்த்தனையைக் கேட்கிறவரே! அற்புதம் செய்கிறவரே! இவருடைய சரீரத்தில் நல்ல சுகத்தையும், பெலத்தையும் தாரும்! இயேசுவே! உம்முடைய வேத வசனத்தை அனுப்பி இவரை குணமாக்கும்! நீரே பரிகாரியாக இருந்து பரிபூரண சுகத்தை இவருக்கு கொடுக்கும்படியாக் வேண்டுகிறேன்! இயேசுவே! நீர் இவருக்கு தயவாய் மனதுருகி அற்புதம் செய்தருளும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு சுகத்தைக் கொடுப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்!

இயேசுவின் இணையற்ற நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜெபம் கேளும் நல்ல பிதாவே! ஆமென்!

“இயேசுகிறிஸ்துவின் தழும்புகளால் குணமானீர்கள்” (1பேதுரு 2 : 24)

## விடுதலைக்காக ஜெபம்!

**(பில்லி சூனியக் கட்டுகளிலிருந்து )**

**எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தையுடைய தேவனே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை உம்முடைய கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! என்னை முழுவதுமாக நீர் ஆளுகைச் செய்யும்! இயேசுவே! நீர் எனக்காக சிலுவையில் சிந்திய உம்முடைய பரிசுத்த இரத்தத்தால் என்னை மறைத்துக் கொள்ளும்! சத்துருவின் எல்லாவித பயத்துக்கும் நீக்கி என்னை விடுவித் தருளும்! எல்லாவித தீங்குகளுக்கும் என்னை விலக்கி காத்துக்கொள்ளும்! சத்துருவினுடைய சகல வல்லமைகளை அழிக்கும்படிக்கு வந்த இயேசுவே! எனக்கு விரோதமாய் செயல்படுகிற பில்லி சூனியக் கட்டுகள் இயேசுவின் நாமத்தினாலே உடைவதாக!



என் மீது தயவாய் மனமிரங்கும்! இயேசுவே உம்முடைய இரத்தத்தினால் சத்துருவை ஜெயிக்க உதவி செய்யும்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் சத்துருவின் வல்லமைகள் விலகட்டும்! உம்முடைய இரத்தத்தினால் என்னை மூடிக் கொள்ளும்! எனக்கு விரோதமாக எழும்புகிற சத்துருவின் வல்லமைகளை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெயிக்கிறேன்!

இயேசுவே! நீர் என் பிரார்த்தனையைக் கேட்டு விடுதலை தந்ததற்காக உமக்கு நன்றி சொல்லுகிறேன்!

இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜீவனுள்ள பிதாவே! ஆமென்!

***"சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடுவார்" (ரோமர் 16 : 20)***

## பிரச்சினை நீங்க ஜெபம்!

**வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் உள்ள சர்வ வல்லமையுள்ள பிதாவே! இந்த வேளைக்காக உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! இதுவரை நீர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி! இப்பொழுதும் இந்த பிரச்சினைக்காக உம்மை நோக்கிப் பார்க்கிறேன்! இந்த ...................... பிரச்சினையிலிருந்து எனக்கு விடுதலை தாரும்! இயேசுவே! உம்மால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை! நீர் அற்புதமானவர்! அதிசயமானவர்! என்னுடைய எல்லா சூழ்நிலை களையும் மாற்ற வல்லமையுள்ளவர்! இயேசுவே! நீர் என்மேல் தயவாய் மனதுருகி இந்த பிரச்சினையிலிருந்து விடுதலை தாரும்! என் உள்ளத்தில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தந்தருளும்படி



வேண்டுகிறேன்! **"இயேசுகிறிஸ்து விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவான் 8 : 36)** என்ற உம்முடைய வேத வசனத்தின்படி எனக்கு விடுதலை தந்தருளும்! இயேசுவே! இனிமேல் இதுபோன்ற பிரச்சினையில் நான் சிக்கிக்கொள்ளாத படிக்கு என்னை காத்துக் கொள்ளும்! என் ஆவி, ஆத்துமா, சரீரத்தை உம்முடைய கரங்களில் அர்ப்பணிக்கிறேன்!

இயேசுவே! நீர் என் பிரார்த்தனையைக் கேட்டு இந்த பிரச்சினையிலிருந்து எனக்கு விடுதலை கொடுத்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! அன்புள்ள பிதாவே! ஆமென்!

***"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்" (சங்கீதம் 50 : 15)***

## தொழில் செய்வோரின் ஜெபம்!

பரிசுத்தப் பிதாவே! இந்த நாளுக்காக உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!

இயேசுவே! கடந்த நாள் முழுவதும் உம்முடைய கரம் என்னோடுகூட இருந்ததற்காக உமக்கு நன்றி இயேசுவே! எல்லாவித தீங்கான க்காரியங்களுக்கும் என்னை விலக்கிப் பாதுகாத்தற்காக உமக்கு நன்றி! நீர் கொடுத்த இந்த .............................. தொழிலுக்காக உம்மை துதிக்கிறேன்! இன்று என்னுடைய கையின் பிரயாசத்தை ஆசீர்வதியும்! என்னுடன் வேலை செய்யும் எல்லா சகோதர, சகோதரிகளையும் ஆசீர்வதித்து உயர்த்தும்! இந்த தொழிலை திறம்பட செய்ய என்னை உம்முடைய தெய்வீக ஞானத்தினாலும், புத்தியினாலும் நிரப்பும்! நான் செய்யும் எல்லா



வேலையிலும் உமக்குப் பிரியமாக நடந்துகொள்ள எனக்கு உதவி செய்யும்! இயேசுவே! என் குடும்பத்திற்கு வேண்டிய வருமானத்தைத் தாரும்! இந்த தொழிலின் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட உதவி செய்யும்! எங்கள் தேவைகளைச் சந்தியும்! எங்கள் குறைவுகளை நிறைவாக்கும்! பாக்கியமும், நன்மையும் உண்டாகட்டும்! இந்த நாள் முழுவதும் எங்களை கரம்பிடித்து வழிநடத்தும்!

பிரார்த்தனையைக் கேட்கிறவரே! அதிசயம் செய்கிறவரே!நீர் அப்படி செய்வதற்காக உமக்கு நன்றி!

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! பரிசுத்தமுள்ள நல்ல பிதாவே! ஆமென்!

***“உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்” (சங்கீதம் 128 : 2)***

## குடும்ப பாதுகாப்பிற்காக ஜெபம்!

எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தையுடைய தேவனே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!

ஆண்டவரே! என் குடும்பத்திலுள்ள (கணவன், மனைவி, பிள்ளைகள்) ஒவ்வொருவருடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தையும் உம்முடைய பாதுகாப்பின் கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே! எங்களைச் சுற்றிலும் உம்முடைய தெய்வீக பாதுகாப்பின் கரம் கூட இருந்து இந்த பயணத்தை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறேன்! இன்று எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் வேலை செய்யும் இடங்களிலும், பயணங்களிலும் நீர் கூட இருந்து கரம் பிடித்து நடத்தும்படியாக ஜெபிக்கிறேன்! நாங்கள் பயணம் செய்யும் போது உம்முடைய சமுகம் எங்களோடு கூட வரும்படியாக ஜெபிக்கிறேன்.



ஆண்டவரே! நாங்கள் வேலை செய்யும் இடங்களைச் சுற்றிலும் உமது பிரசன்னம் சூழ்ந்திருக்கும்படியாக ஜெபிக்கிறேன்! ஆண்டவரே! எங்களுடைய பயணத்திற்கும், பாதுகாப்பிற்கும் விரோதமாக எழும்புகிற எல்லாத் தடைகளும் உம்முடைய வல்லமையுள்ள நாமத்தினால் விலகுவதாக! இயேசுவே! எந்த தீங்கும் எங்களை அணுகாதபடிக்கு எல்லாவித ஆபத்துகளுக்கும் எங்களை விலக்கிப் பாதுகாத்தருளும்படியாக ஜெபிக்கிறேன்!

ஆண்டவரே! என் பிரார்த்தனையைக் கேட்டு எங்களை பாதுகாப்பதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்!

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜீவனுள்ள நல்ல பிதாவே! ஆமென்!

***''இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை'' (சங்கீதம் 121 : 4)***

## வழிப் பயணத்திற்காக ஜெபம்!

**சர்வ வல்லமையுள்ள தேவனே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்! வாழ்த்துகிறேன்!**

ஆண்டவரே! இப்பொழுதும், நான் புறப்பட்டுச்செல்கிற இந்த பயணத்திற்காக உம்முடைய சமுகத்தில் ஜெபிக்கிறேன்! இயேசுவே! என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்தையும் உம்முடைய கரங்களில் ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறேன்! நீர் என்னோடுகூட வந்து இந்த பயணத்தை ஆசீர்வதிக்கும் படியாக ஜெபிக்கிறேன்! இயேசுவே! உம்முடைய சமுகம் என்னோடுகூட வரும்படியாக ஜெபிக்கிறேன்! நான் பயணம் செய்கிற வாகனத்தைச் சுற்றிலும் உம்முடைய தெய்வீக பாதுகாப்பு உண்டாகும்படியாக ஜெபிக்கிறேன்! வாகனத்தை ஓட்டுகிற வரையும், வண்டியில் பயணம் செய்கிற ஒவ்வொருவரையும் உம்முடைய



கரங்களில் ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே! இந்த பயணத்தில் எந்த விதமான தடையும் வராதபடிக்கு சுகமாக பயணம் செய்ய உதவி செய்யும்! இயேசுவே! தீங்கு என்னை அணுகாமல் எல்லாவித ஆபத்துகளுக்கும் என்னை விலக்கி பாதுகாத்தருளும்படியாக ஜெபிக்கிறேன்! என் ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்தையும் நீர் எனக்காக சிலுவையில் சிந்திய உம்முடைய இரத்தத்தில் மறைத்து ஜெபிக்கிறேன்!

ஆண்டவரே! என் பிரார்த்தனையைக் கேட்டு என் பயணத்தை வாய்க்கப்பண்ணுவதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்!

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! அன்பின் பரம பிதாவே! ஆமென்!

**''இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை'' *(சங்கீதம் 121 : 4)***

## பிரார்த்தனை!

(மத்தேயு 6 : 9-13)

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக!

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக!

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்!

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்!

எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே! ஆமென்!



## பிரார்த்தனை நேரங்கள்!

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும்

1–வது: காலை 6.00 முதல் 8.15 வரை

2–வது: காலை 8.15 முதல் 10.30 வரை

3–வது: காலை 10.30 முதல் 1.15 வரை

4–வது: மாலை 4.00 முதல் 6.00 வரை (கன்னடா, தெலுங்கு)

5–வது : மாலை 6.00 முதல் 8.00 வரை

## கிருபையின் நேரம் T.V. நிகழ்ச்சி

ஞாயிறுதோறும் மாலை 7.00–7.30 வரை

காணத்தவறாதீர்கள்!

தொடர்பு முகவரி:

**இயேசு நம்மோடு சபை**

# 46/AA, சாந்திநகர் மேற்கு

3–வது தெரு, ஓசூர்–635 109.

போன்: 04344–521616, 526363

## தியானப்பகுதி - I

**(சங்கீதம் - 91)**

1. உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.

2. நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

3. அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்.

4. அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

5. இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,



6 இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.

7. உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

8. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.

9. எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய்.

10. ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.

11. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

12. உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்.

13. சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்.

14. அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.

15. அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.

16. நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.



## தியானப் பகுதி - II

**(சங்கீதம் - 103)**

1. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.

2. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

3. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,

4. உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,

5. நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது.

6. ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்.

7. அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார்.

8. கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடியசாந்தமும், மிகுந்த கிருபையு முள்ளவர்.

9. அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார்; என்றைக்கும் கோபங் கொண்டிரார்.

10. அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.

11. பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.



12. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.

13. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

14. நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்.

15. மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது; வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான்.

16. காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது.

17. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.

18. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள்மேலேயே உள்ளது.

19. கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.

20. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவ்ருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள்.



21. கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்.

22. கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல கிரியைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்; என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.

***"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமா யிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 1 : 2)***





## வாக்குத்தத்தங்கள்!

- "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்" (ஏசாயா 41 : 10)

- "நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்" (ஏசாயா 41 : 10)

- "என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசாயா 41 : 10)

- "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத்தேயு 28 : 20)

- "உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதியாகமம் 12 : 2)

- "ஜெயமோ கர்த்தரால் வரும்" (நீதிமொழிகள் 21 : 31)



- "நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" (ஆதியாகமம் 15 : 1)

- "உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்" (மீகா 7 : 15)

- "உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்" (ஏசாயா 41 : 13)

- "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11 : 28)

- "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்" (II இராஜாக்கள் 20 : 5)

❖ ''என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்'' (யாத்திராகமம் 33 : 14)

❖ ''நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும், கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன்'' (உபாகமம் 26 : 19)

❖ ''பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்'' (லூக்கா 1 : 30)

❖ ''என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்'' (சங்கீதம் 23 : 6)

❖ ''என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்'' (2 கொரிந்தியர் 12 : 9)

❖ ''தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்'' (சங்கீதம் 46 : 1)



❖ ''என் கன்மலையும் என் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்'' (சங்கீதம் 31 : 3)

❖ ''என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது'' (சங்கீதம் 94 : 19)

❖ ''உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்'' (உபாகமம் 28 : 1)

❖ ''கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்'' (எண்ணாகமம் 6 : 25)

❖ ''கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்'' (நீதிமொழிகள் 14 : 26)

❖ ''கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகு களைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்'' (ஏசாயா 40 : 31)

❖ ''அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக'' (சங்கீதம் 20 : 4)

❖ ''கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத் தைத் தரும்'' (நீதிமொழிகள் 10 : 22)

❖ ''இயேசுகிறிஸ்து உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்கு வேன்'' (யாத்திராகமம் 23 : 25)

❖ ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை யெல்லாம் கிறிஸ்துஇயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' (பிலிப்பியர் 4 : 19)



❖ ''இயேசுகிறிஸ்து சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்'' (சங்கீதம் 113 : 7)

❖ ''சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மை யுங்குறைவுபடாது'' (சங்கீதம் 34 : 10)

❖ ''கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்து விடு, அவர் உன்னை ஆதரிப்பார்'' (சங்கீதம் 55 : 22)

❖ ''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்'' (சங்கீதம் 23:1)

❖ ''நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது'' (நீதிமொழிகள் 23 : 18)

❖ ''இஸ்ரவேலை (உங்களை) ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்'' (எண்ணாகமம் 24 : 1)

## உங்களுக்காக பிரார்த்தனை!

உங்களுக்காக பிரார்த்தனை செய்ய நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்! உங்கள் தேவைகளை கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்!

24-மணி நேரமும் தொலைபேசியில் உங்களுக்காகப் பிரார்த்தனை செய்ய காத்திருக்கிறோம்!

## தொலைபேசி எண்கள்:

04344-521616, 526363

தொடர்பு முகவரி:


**இயேசு நம்மோடு சபை**

#46/AA, சாந்திநகர் மேற்கு
3-வது தெரு, ஓசூர் - 635 109.
போன்: 04344-521616, 526363



PRINTERS : NEW SENBAGAM OFFSET PRINTERS
SATCHIYAPURAM, SIVAKASI. ✆: 04562 - 420432

# MUZHANGAL YUTTHAM

## "PRARTHANAI NERAM"

இப்பிரார்த்தனை கையேட்டினைப் பயன்படுத்தி மிகவும் எளிய முறையில் பிரார்த்தனை செய்ய கற்றுக் கொள்ளலாம். யாவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.


CONTACT ADDRESS

**MUZHANGAL YUTTHAM**

P.B.No.40, HOSUR - 635 109

PH : 04344 - 521616, 526363